## மாகாணக் கல்வித் திணைக்களம்
## வடக்கு மாகாணம்
## Provincial Department of Education, Northern Province

### மாதாந்த மதிப்பீடு

| தரம் - 11 | தமிழ்மொழியும் இலக்கியமும் | யூலை – 2022 |
|---|---|---|

### பகுதி - I

**எல்லா வினாக்களுக்கும் விடை தருக.**

1. “பொய்கை ஊரான் கேண்மை செய்து இன்புற்றனெம் செறிந்தன வளையே” இங்கு **கேண்மை** என்பது.
   1. நட்பு 2. பகைமை 3. உறவு 4. பந்தம்

2. “கிம்புரியின் கொம்பொடித்து வெம்பு தினை இடிப்போம்” இங்கு **கிம்புரி** என்பது.
   1. தந்தம் 2. களிறு 3. மலை 4. சிகரம்

3. “ஏதிலார் ஆரத் தமர் பசிப்பர் பேதை பெருஞ் செல்வம் உற்றக்கடை” **தமர்** என்பதன் எதிர்க்கருத்துச் சொல்
   1. உறவினர் 2. அயலவர் 3. பிறர் 4. மேலோர்

4. “சிறந்த வீரன் போரிலே வெற்றி பெறுவான்” இங்கு வீரன் என்பதன் எதிர்ப்பாற் சொல்.
   1. வீராங்கனை 2. வீரி 3. அரசி 4. வீரபத்தினி

5. “விசேஷ மூன்றுங் குலாவுள்ள நாடு” விசேஷ மூன்றும் என்பதனுள் அடங்காதத எது?
   1. நித்தியம் 2. அத்தியம் 3. நைமித்தியம் 4. காமிகம்

**பின்வரும் வினா ஒவ்வொன்றினதும் பொருத்தமான விடையைத் தெரிவுசெய்க.**

6. **Budget** (பட்ஜட்) என்பதன் தமிழ்ச் சொல்லாக அமைவது.
   1. பாதீடு 2. கேள்வி 3. படிமம் 4. திண்மம்

7. புராணக் கதைகளைச் சுவைபடப் பிரசங்கம் செய்வோன்.
   1. துறவி 2. குரு 3. பௌராணிகன் 4. தபுதாரன்

8. நஞ்சு, மழைநீர், ஆலமரம், அம்புக்கூடு என்னும் பல பொருள் தரும் ஒரு சொல்.
   1. காலம் 2. சாலம் 3. ஆலம் 4. ஞாலம்

9. புளியின் இளங்காய் பிஞ்சு என்பத போல தென்னையின் இளங்காய்.
   1. இளநீர் 2. நுங்கு 3. பிஞ்சு 4. வடு

10. பின்வரும் சொற்களில் “க” கரம் வேறுபட்டு ஒலிக்கும் சொல்.
    1. சுகம் 2. மேகம் 3. தேகம் 4. கப்பல்

11. அசுவம், துரகம், புரவி, பருதி இவற்றுள் மாறுபட்டுள்ள பொருள் தரும் சொல்
    (1) அசுவம் (2) பருதி (3) துரகம் (4) புரவி



kalvi.lk

12. Compact Disk என்ற கலைச்சொல்லின் தமிழ் வடிவம்
(1) செலுத்தி (2) புலனம் (3) இறுவட்டு (4) அதிரி

13. மெய்,வாய்,கண்,மூக்கு, செவி என்பன
(1) ஐம்புலன் (2) ஐம்பொறி
(3) ஐம்பால் (4) ஐந்திணை

14. சாது போல் நடித்துத் தீது புரிதல் என்னும் பொருளைத் தரும் மரபுத்தொடர்
(1) கைபிசைதல் (2) ஆற்றுப்படுத்தல்
(3) உருத்திராட்சப் பூனை (4) இருதலைக்கொள்ளி எறும்பு

15. இராமனைப் பிரிந்த சீதை ........................... துன்பத்தில் மூழ்கினாள்.
(1) குன்றிலிட்ட தீபம் போல (2) இணை பிரிந்த அன்றில் போல
(3) கிணத்துத் தவளை போல (4) தாமரை இலைமேல் நீர்த்துளி போல

16. அணை கடந்த வெள்ளம் அழுதாலும் வராது என்ற பழமொழி உணர்த்துவது
(1) அளவுகடந்த துன்பம் (2) நீரின் முக்கியத்துவம்
(3) சென்றகாலம் திரும்பி வராது (4) அழுது வெள்ளத்தை அடக்க முடியாது

17. ‘ஒரு நாடு இருதேசம்’ என தமிழர்கள் முழங்கினர். இவ்வாக்கியம்
(1) தனி வாக்கியம் (2) கலப்பு வாக்கியம்
(3) தொடர் வாக்கியம் (4) கூட்டு வாக்கியம்

18. ‘க’கரம் வேறுபட்டு ஒலிக்கும் சொல்
(1) கடல் (2) கப்பல் (3) மேகம் (4) கதவு

19. வானிலை சீரற்றுக் காணப்படுகின்றது. மீனவர்கள் கடலுக்குச் செல்லமாட்டார்கள். இவ்விரு வாக்கியங்களையும் இணைக்கக்கூடிய மிகப் பொருத்தமான இணைப்பிடைச்சொல்
(1) ஆனால் (2) ஆகவே (3) எனினும் (4)அல்லது

20. பாவை வந்தாள் என்பது
(1) உவமைத்தொகை (2) பண்புத்தொகை
(3) அன்மொழித்தொகை (4) இருபெயரொட்டுப்பண்புத்தொகை

(20x1= 20 புள்ளிகள்)

**பின்வரும் வினாக்களுக்குச் சுருக்கமான விடை தருக.**

1. பின்வரும் தொடரைச் சந்திபிரித்து எழுதுக.

   ‘பங்கப் பழனத் துழு முழவர்’’

2. பின்வரும் வாக்கியத்தின் எழுவாய், பயனிலைகளை இனங்கண்டு எழுதுக.

   ‘காட்டில் மறைந்திருந்த புலி வேடனால் வேட்டையாடப்பட்டது.’

3. பின்வரும் செய்வினை வாக்கியத்தைச் செயப்பாட்டு வினை வாக்கியமாக மாற்றி எழுதுக.

   ‘நாங்கள் நல்லவற்றைப் பேண வேண்டும்.’

4. பின்வரும் வாக்கியத்திலுள்ள வழுவை இனங்கண்டு திருத்தி எழுதுக.

   ‘பொய் சொல்வதும் களவெடுப்பதும் நல்ல பழக்கமல்ல.’

5. கீழ்ள்ள தொடரில் இடம்பெற்றுள்ள அடைமொழிகளை எழுதுக.

   ‘பசுமையான புல்வெளியில் பசுக்கள் மகிழ்ச்சியாக மேய்ந்தன.’

(5x2= 10 புள்ளிகள்)



kalvi.lk

**பின்வரும் வினாக்களுக்குச் சுருக்கமான விடை தருக.**

1. 'வண்டோ கானத்திடையிருந்து வந்து கமல மதுவுண்ணும்' என்ற தொடரில்

   அ) கானம்

   ஆ கமலம் ஆகியவற்றின் ஒத்த சொற்களை எழுதுக.

2. உப்பில்லாக் கஞ்சியினை உண்ணும் அறுசுவை போல்..''

   அ) முதுமொழி வெண்பாவின் ஆசிரியர் யார்?

   ஆ) மேற்படி செய்யுளில் இடம்பெற்றுள்ள முதுமொழி யாது?

3. 'நாவலர் எழுந்தார்' என்ற கட்டுரையில் சென்னைச் சர்வகலாசாலையார் நடாத்திய பீ.ஏ. பரீட்சையில் சித்தியடைந்தோராகக் குறிப்பிடப்பட்ட இருவரும் யாவர்?

4. ஆ) நாவலர் கூட்டத்திற்குத் தலைமை தாங்காமைக்கான காரணம் யாது?

   ஆ) அவருக்குப் பதிலாக தலைமை தாங்கியவர் யார்?

5. யாத்த தேருருளைப்படு மேழைதான் யாண்டு தேர்செலுமாங்கிழுப்புற்றென..'

   அ) இப்பாடல் வரிகளில் இடம்பெற்றுள்ள அணி யாது?

   ஆ) மேழை என்பதன் பொருள் யாது?

(5x2= 10 புள்ளிகள்)

**கீழே தரப்பட்டுள்ள உரைப்பகுதியின் சுருக்கத்தை 40 – 45 சொற்களில் அமையக் கூடியவாறு எழுதுக. (சொற்களின் எண்ணிக்கையைக் குறிப்பிடுக)**

மனிதன் பூமியில் பிறக்கும் போது பூரண குணாம்சங்களோடு பிறக்கின்றான். அவன் வளரும் பாதைகள் வெவ்வேறுபட்ட சூழலில் அமைவதால் குணாம்சங்களும் மாறுபடுகின்றன. சிலர் இவ்வாறான மனித வாழ்க்கையில் ஏற்படும் குறைகளை மாத்திரமே கண்டுபிடித்து அவற்றைப் பிறருக்குக் கூறிக்கொண்டே இருப்பார்கள். இவர்கள் மனிதர்களின் நிம்மதியைக் கெடுக்கின்றோமே என்ன உணர்வு இல்லாதவர்கள். மனிதர்களிடம் நிறைவுகளும் உண்டு என்பதை இத்தகையோர் ஏற்றுக்கொள்வதில்லை. அந்த நிறைவுகளைக் கண்டு அவற்றைப் போற்ற வேண்டும், பாராட்ட வேண்டும் என்ற எண்ணம் சிறிதும் இருப்பதில்லை. மற்றையோரின் குறைகளைக் கண்டுபிடித்து அவற்றைப் பெரிதுபடுத்தித் தூற்றித் திரிவதில் நயம் காண்பவர்களாக உள்ளனர். சமூகத்தில் இப்படியானவர்கள் பிரச்சினைக்கு வழிவகுக்கின்றார்களே தவிர, வேறு பயன்தரக் கூடிய விடயங்களில் ஈடுபடுவதில்லை.

சமூகத்தில் குறைபாடுகள் இல்லாதவர்களே இல்லை. ஒருவரின் குறைகளைச் சுட்டிக் காட்டித் திருத்த வேண்டும் என்றால் அவரைத் தனிமையில் அழைத்து அன்புடனும், பண்புடனும் குறைகளை எடுத்துக் கூறித் திருந்துவதற்கான புத்திமதிகளையும் சொல்லி அவர் ஏற்கத்தக்க வகையில் நடந்துகொள்ள வேண்டும் என்பதே விவேகமானதும் பண்பானதுமான செயலாகும். அதேபோன்று ஒருவருடைய நிறைவுகளைப் பகிரங்கமாகப் பேசுதல் வரவேற்கத்தக்கது. அதனால் அவர் மேலும் பல நிறைவுகளை அடைவதற்கு வழியேற்படுகின்றது.

(10 புள்ளிகள்)



kalvi.lk

# 2025

## 1ம் தவணை வகுப்புகள்

**தரம் 6 முதல் 11 வரையான மாணவர்களிற்கான தமிழ் மற்றும் ஆங்கில மொழிமூல வகுப்புக்கள் ஆரம்பமாகவுள்ளன.**

**ஆரம்பம் 01.01.2025**

இலங்கையின் எப்பாகத்திலிருந்தும் Zoom app மூலம் எமது வகுப்புகளில் இணைந்து கொள்ள முடியும்.

அனைத்துப் பாடங்களும் ஒரே கல்வி நிறுவனத்தின் கீழ்...

Education கல்வி Kalvi.lk

Whatsapp
075 287 1457